52

கும்பகோணம்

# மாமாங்கசரித்திரக்

# கும்மி.

மாமாங்க புராண வசனகாவியம்.
11-அத்தியாயமுடையது.
விலை அணா 4.



கும்பகோண க்ஷேத்திர சங்கீர்த்தன
மாமாங்கதீர்த்த விசேஷகப்பட்டம்
விலை அணா 1.

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரால் இயற்றப்பட்டு

தமது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது

---

**Pandit C. Munisawmy Mudaliars Coy,**

**PERAMBUR BARRACKS POST MADRAS.**

**1909**

T-UN-581

உ

கடவுள் துணை.

---

# கும்பகோணம்

# மாமாங்கசரித்திரகும்மி.

நூன்முகம் கும்மிகள்.

சித்திமுத்தியிரு பெண்களுடன்-இஷ்ட
சித்தியெலாந்தரு மன்னவனே
தத்திமித்தோமென ஆகுவின்மீதிலே
தாண்டவஞ் செய்துவா முன்னவனே. (க)

மூலாதாரக் கணபதியே மோட்ச
மேலாதாரத் துணைபதியே
பாலும்பழமவல் மோதகந் தேன்பசி
யாரப்புசியுங் குணபதியே. (உ)

செந்தமிழ் தந்தருள் கந்தன்-கமலத்தை
சேவித்து பூஜித்து சிந்தைசெய்து
கந்தமலர்ச்சோலை சூழுங் கும்பகோண
காட்சியைக் கேளுமென் சேடிகளே. (ங).

பூர்வத்தில் பூமியின் சிருஷ்டியிலே-புண்ய
தீர்த்தமனேகமுண் டாகையிலே
சீர்பெற்ற சித்தர் முனிவர்தவஞ்செய்த
சேதியைக் கேளுமென் சேடிகளே. (ச)

காசிக்கிபோகிற பாதையிலே-ரிஷி
கவுதமர் தீர்த்தக் கரைதனிலே
கோசிகர்வியாசர் பராசர மாமுனி
கோடிகணக்கான மாரிஷிகள். (ரு)

கபிலர் காங்கேயர் மூர்க்கர்-பயிரவர்
காளவர் கண்ணுவர் சவுனகரும்
சுசீலர்கற்கர் போதாயனமாரிஷி
சூதமுனி பாரத் துவாசருடன். (சு)

அகத்தியர் நாரதர் திருணபிந்து-முனி
அத்திரி காசிபர் ரோமசன்மர்
சுகப்பிரம்மாவுடன் தூருவாசரிஷி
தௌமியர் பார்கவர் மார்க்கண்டரும். (௭)

புலகர் புலத்தியர் யோகமுனி-இன்னம்
பிறகு அங்கீசர் மதங்கருடன்
உலகமறிந்த ஜெமதக்கினி ரிஷி
உத்தமரான வதிஷ்டமுனி. (௮)

இத்தகையான மகரிஷிகளங்கே
யெண்ணற்ற பேராகக் கூடிக்கொண்டு
சத்திரயாகம தென்றொரு வேள்வியை
செய்துவருகிற நாளையிலே. (௯)

பன்னிரண் டாண்டுக் கொருமாதம்-இந்த
பாரத்தவமுனி யாவர்களும்
உன்னிதமாகிய சத்திரயாகத்தை
உகந்துசெய்து றருவ்துண்டாம். (௰)

ஆவணியென்கிற சிம்மராசிதனில்
அண்டர்குருவாம் பிரகஸ்பதியும்
தோரணியாகக் கலந்திருக்கும்போது
தூயவர்யாகந் தனைமுடிப்பார். (௧௧)

இப்படியாகத் தவமுனிவோர்-கூடி
சுஸ்பரயாகம் நடத்துவதை
தப்பிலிநாரதன் தானறிந்து-ஒரு
தாண்டாய் கயிலை மலைக்குவந்தார். (௧௨)

ஆகமத்துள்ளும் அடிமுடியு-மிந்த
அண்டரண்டபகி ரண்டமுதல்
ஏகப்பரம்பொருளானவரே ஜெக
தீசாநின்றாள் சருணமென்றான். (௧௩)

சருணமென்றிந்த நாரதமாமுனி
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து
கருணைசேரு முலகமெல்லாம் சுத்தி
காசிக்சி போகுர பாதையிலே. (௧௪)

தென்பொதிகாசலம விட்டிரங்கி-இந்த
தேசத்தைசுற்றி வருகையிலே
பன்னும் சிவகிரிச் சாரலிலே-யொரு
பாரநதிக்கரை யோரத்திலே. (௧௫)

# கும்பகோணம்

கண்ணுக்குக் கண்கொண்ட தூரமட்டும்-அந்த
கங்கையண்டை சிலகாலமட்டும்
எண்ணரியரிஷிக் கூட்டமெல்லாமொரு
யாகம் நடத்துரார் சுவாமியென்றான். (௧௫)

பூமிவலஞ் செய்யும் நாரதமாமுனி
போற்றியே சொன்னமொழிக ளெல்லாம்
சுவாமி திருவுளம்பற்றிக் கொண்டு பின்னே
சற்றே திருவாய் மலர்ந்தருள்வார். (௧௬)

என்னவரம்பெற வேணுமென்று-அங்கே
யிப்பெரும் யாகம் நிகழ்த்தலுற்றார்
அன்னவர் தங்கள்மனக் கோளறிவாயோ
ஆத்திரமாய் வந்த நாரதனே. (௧௭)

என்மனம் யென்னுயிர் யென்னிரிவு - ஐயா
யென்விழி யென்னுடல் யென்னியறகை
தன்னிலே தானாய்கலந்தவரே யிந்த
தாரிணியெங்கும் நிரைந்தவரே. (௧௮)

எண்பத்துநான்கு நூராயிர-பேதத்தின்
யெண்ணத்தை யெல்லாமே நீரறிவீர்
கண்ணினாற்கண்டதை சொன்னதன்னி இந்த
காளையரி யேனவர் மனத்தை. (௧௯)

இப்படியாய் கயிலாசத்திலே-ஜெக
தீஸபரன் நாரதர் தன்னுடனே
செப்பமாய் பேசியிருக்கையிலே ஒரு
சேதியைக் கேளுமென் சேடிகளே. (௨௰)

கங்கையமுனை சரஸ்வதி-சிந்துகா
வேரிநருமதை சராயுநதி
மங்கள சவுதமிப்பாலா ரொன்பதும்
மாதவஞ் செய்யத்துடங் கினவாம். (௨௧)

ஒன்பது பேருந்தவமிருந்தால்-மேலே
உம்பரும் மற்றமனுக்களுக்கும்
தண்புனலின்றி துயருற்றா லன்னவர்
தன்னால்வருஞ் சாபமென் றுணர்ந்து. (௨௨)

ஒன்பது புண்ணிய தீர்த்தமும்-ஒன்பது
உத்தம ஸ்திரீகள் வடிவெடுத்து
அன்புடனே கயிலாசமலையிலே
அப்பன் சமுகத்தில் வந்துநின்றார். (௨௩)